# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1709/8 - 2011 ජූනි 06 වැනි සඳුදා - 2011.06.06

*1709/8 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியளிப்பு 6 செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் கட்டுடை நீர்த்தேக்கம் மற்றும் பிரதேச அலுவலகம் அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2011, யூன் 02.*
*5/2/1/916.*

**அட்டவணை**

*யாழ்ப்பாண மாவட்டம், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில், மானிப்பாய் J/140 கிராம அலுவலர் பிரிவின், மானிப்பாய் J/140 எனும் கிராமத்தில் சூடுவெந்த புலம் எனும் காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் 0.31875 ஹெக்டேயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-*

| | | |
|---|---|---|
| *வடக்கு* | : | *மானிப்பாய் பாதை மற்றும் திரு. தம்பிப்பிள்ளை நாகலிங்கம் உரிமைகோரும் காணி ;* |
| *கிழக்கு* | : | *திரு. சண்முகம் பொன்னம்பலம் உரிமைகோரும் காணி ;* |
| *தெற்கு* | : | *திரு. விசுவர் இராமலிங்கம் உரிமைகோரும் காணி ;* |
| *மேற்கு* | : | *திவானிப்பிள்ளையின் மகள் தாமோதரம் உரிமைகோரும் காணி.* |

*உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் :* *திரு. சிவகுநாதன் சிவநாதன்,*
*கட்டுடை,*
*மானிப்பாய்,*
*யாழ்பபாணம்.*

*6 - 424*

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியளிப்பு 6 செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் காரைநகர் நீர்க் கோபுரம் அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2011, யூன் 02.*
*5/2/1/917.*

**அட்டவணை**

*யாழ்ப்பாண மாவட்டம், காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில், காரைநகர் கிழக்கு (J/42) கிராம அலுவலர் பிரிவின், மொந்திபுலம் எனும் கிராமத்திலுள்ள மடத்துக்கரை, வளந்தலை எனும் காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் 0.0625 ஹெக்டேயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-*

வடக்கு : எடுத்துக்கொள்ளப்படும் காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : எடுத்துக்கொள்ளப்படும் காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : எடுத்துக்கொள்ளப்படும் காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : எடுத்துக்கொள்ளப்படும் காணியின் எஞ்சிய பகுதி.

*உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் :* பொறுப்பாளர்,
சிதம்பரம் கோயில்,
யாழ்ப்பாணம்.

*06-425*

---

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியளிப்பு 6 செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம்- கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் எழுவ தீவு நீர்க்கோபுரம் அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,*
*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.*

*நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2011, யூன் 02.*
*5/2/1/918.*

**அட்டவணை**

யாழ்ப்பாண மாவட்டம், காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில், எலுவதீவு (J/39) கிராம அலுவலர் பிரிவின், எழுவ தீவு எனும் கிராமத்திலுள்ள சென் தோமஸ் மீனவர்களின் கூட்டுறவுச் சங்கம் எனும் காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் 0.05 ஹெக்டேயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-

வடக்கு : எடுத்துக்கொள்ளப்படும் காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : எடுத்துக்கொள்ளப்படும் காணியின் எஞ்சிய பகுதி ;
தெற்கு : எடுத்துக்கொள்ளப்படும் காணியின் எஞ்சிய பகுதி ;
மேற்கு : எடுத்துக்கொள்ளப்படும் காணியின் எஞ்சிய பகுதி.

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : தலைவர்,
சென் தோமஸ் மீனவர்களின் கூட்டுறவுச் சங்கம்,
எழுவதீவு.

6 - 426

---

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியளிப்பு 6 செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம்- கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் புங்குடுதீவு நீர்க் கோபுரம் அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2011, மே 31.
5/2/1/919

**அட்டவணை**

யாழ்ப்பாணம் மாவட்டம், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில், புங்குடுதீவு மத்திய கிழக்கு (J/30) கிராம அலுவலர் பிரிவின், புங்குடு தீவு மத்திய கிழக்கு எனும் கிராமத்திலுள்ள அவிஎலுவன் எனும் காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் 36 பேர்ச்சஸ் (3 Lms . 10kls) விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-

வடக்கு : திருநாவுக்கரசு சிவசந்தினி உரிமைகோரும் காணி ;
கிழக்கு : மஹாலிங்கம் சிவஞானகௌரி உரிமைகோரும் காணி ;
தெற்கு : சர்வோதயவுக்கு சொந்தமான காணி ;
மேற்கு : சிதம்பரநாதன் உரிமைகோரும் காணி.

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : பிரதம செயலாளர்,
இலங்கை தேசிய சர்வவோதய சிரமதான சங்கம்,
இல. 98, தம்சக் மந்திரய.
ராவதாவத்தை வீதி,
மொறட்டுவ.

6 - 427

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியளிப்பு 6 செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம்- கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் கோண்டாவில் நீர்க்கோபுரம் மற்றும் பிரதேச அலுவலகம் அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2011, மே 31.
5/2/1/920

**அட்டவணை**

யாழ்ப்பாண மாவட்டம், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில், கோண்டாவில் தெற்கு கிழக்கு (J/120) கிராம அலுவலர் பிரிவின், கோண்டாவில் தெற்கு கிழக்கு எனும் கிராமத்திலுள்ள (காணியின் பெயர் தெரியவில்லை) காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் 0.12 ஹெக்டேயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-

வடக்கு : கோண்டாவில் இருபாலை வீதி மற்றும் அதே காணியின் எஞ்சிய பகுதி ;
கிழக்கு : யாழ்ப்பாண நகர சபை மற்றும் கோண்டாவில் உள்வாங்கி அமைந்துள்ள காணி ;
தெற்கு : யாழ்ப்பாண நகர சபை மற்றும் கோண்டாவில் உள்வாங்கி அமைந்துள்ள காணி ;
மேற்கு : திருநெல்வேலி பாற்சபை வீதி.

உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : யாழ்ப்பாண நகர சபை,
நல்லூர்.

6 - 428

---

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன ஆகிய நான், இச்சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியளிப்பு 6 செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம்- கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் அனலைதீவு நீர்க்கோபுரம் அமைப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையா சொத்துக்களின் உரிமைக் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்த்தன,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2011, யூன் 02.
5/2/1/923

**அட்டவணை**

*யாழ்ப்பாண மாவட்டம், காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில், அனலைதீவு (J/37) கிராம அலுவலர் பிரிவின், அனலைதீவு எனும் கிராமத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ சங்கநாதர் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயக் காணியின் முழு விஸ்தீரணத்தில் சுமார் 0.05 ஹெக்டேயார் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு :-*

வடக்கு : திரு. சண்முகம் ராஜரத்தினம் உரிமைகோரும் காணி ;

கிழக்கு : அதே காணியின் எஞ்சிய பகுதி ;

தெற்கு : துறைமுக வீதி ;

மேற்கு : திரு. பொன்னம்பலம் மாகண்டு உரிமைகோரும் காணி.

*உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் :* பொறுப்பாளர்,
சங்கநாதர் மகா கணபதிப்பிள்ளையார் கோவில்,
யாழ்ப்பாணம்.

6 - 429

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.